www.prepp.in

Prepp JICGT Your Personal Exams Guide

Sl. No. :

பதிவு எண்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | |

# 2019

# பொதுத் தமிழும் பொது அறிவும்

அனுமதிக்கப்பட்டுள்ள நேரம் : 3 மணி] [மொத்த மதிப்பெண்கள் : 300

**வினாக்களுக்கு பதிலளிக்குமுன் கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாகப் படிக்கவும்**

**முக்கிய அறிவுரைகள்**

1. இந்த வினாத் தொகுப்பு தேர்வு தொடங்குவதற்கு 15 நிமிடங்களுக்கு முன்னதாக விண்ணப்பதாரர்களுக்கு வழங்கப்படும்.
2. இந்த வினாத் தொகுப்பு **200** வினாக்களைக் கொண்டுள்ளது. விடையளிக்க தொடங்குமுன் இவ்வினாத்தொகுப்பில் எல்லா வினாக்களும் வரிசையாக இடம் பெற்றுள்ளனவா என்பதையும் இடையில் ஏதும் வெற்றுத்தாள்கள் உள்ளனவா என்பதையும் சரிபார்த்துக் கொள்ளவும். **ஏதேனும் குறைபாடு இருப்பின், அதனை பத்து நிமிடங்களுக்குள் அறைகண்காணிப்பாளரிடம் தெரிவித்து, சரியாக உள்ள வேறொரு வினாத் தொகுப்பினை பெற்றுக் கொள்ள வேண்டும். தேர்வு தொடங்கிய பின்பு, முறையிட்டால் வினாத் தொகுப்பு மாற்றித் தரப்பட மாட்டாது.**
3. **எல்லா** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **எல்லா** வினாக்களும் சமமான மதிப்பெண்கள் கொண்டவை.
4. உங்களுடைய பதிவு எண்ணை இந்தப் பக்கத்தின் வலது மேல் மூலையில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் நீங்கள் எழுத வேண்டும். வேறு எதையும் வினாத் தொகுப்பில் எழுதக் கூடாது.
5. விடைகளை குறித்து காட்ட என, விடைத்தாள் ஒன்று உங்களுக்கு அறைக் கண்காணிப்பாளரால் தரப்படும்.
6. உங்களுடைய வினாத்தொகுப்பு எண்ணை (Question Booklet Number) விடைத்தாளின் இரண்டாம் பக்கத்தில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் நீலம் அல்லது கருமை நிற மையுடைய பந்துமுனைப் பேனாவினால் குறித்துக் காட்ட வேண்டும். மேற்கண்டவற்றை விடைத்தாளில் நீங்கள் குறித்துக் காட்டத் தவறினால் தேர்வாணைய அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
7. ஒவ்வொரு வினாவும் (A), (B), (C) மற்றும் (D) என நான்கு விடைகளைக் கொண்டுள்ளது. நீங்கள் அவைகளில் ஒரே ஒரு சரியான விடையைத் தேர்வு செய்து விடைத்தாளில் குறித்துக் காட்ட வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடைகள் ஒரு கேள்விக்கு இருப்பதாகக் கருதினால் நீங்கள் மிகச் சரியானது என்று எதைக் கருதுகிறீர்களோ அந்த விடையை விடைத்தாளில் குறித்துக் காட்ட வேண்டும். எப்படியாயினும் ஒரு கேள்விக்கு ஒரே ஒரு விடையைத்தான் தேர்ந்தெடுக்க வேண்டும். உங்களுடைய மொத்த மதிப்பெண்கள் நீங்கள் விடைத்தாளில் குறித்துக் காட்டும் சரியான விடைகளின் எண்ணிக்கையைப் பொறுத்தது.
8. விடைத்தாளில் ஒவ்வொரு கேள்வி எண்ணிற்கும் எதிரில் Ⓐ, Ⓑ, Ⓒ மற்றும் Ⓓ என நான்கு வட்டங்கள் உள்ளன. ஒரு கேள்விக்கு விடையளிக்க நீங்கள் சரியென கருதும் விடையை ஒரே ஒரு வட்டத்தில் மட்டும் நீலம் அல்லது கருமை நிற மையுடைய பந்து முனைப் பேனாவினால் குறித்துக் காட்ட வேண்டும். ஒவ்வொரு கேள்விக்கும் ஒரு விடையைத் தேர்ந்தெடுத்து விடைத்தாளில் குறிக்க வேண்டும். ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட விடையளித்தால் அந்த விடை தவறானதாகக் கருதப்படும். உதாரணமாக நீங்கள் Ⓑ என்பதை சரியான விடையாகக் கருதினால் அதை பின்வருமாறு குறித்துக் காட்ட வேண்டும்.

   Ⓐ ● Ⓒ Ⓓ
9. நீங்கள் வினாத் தொகுப்பின் எந்தப் பக்கத்தையும் நீக்கவோ அல்லது கிழிக்கவோ கூடாது. தேர்வு நேரத்தில் இந்த வினாத் தொகுப்பினையோ அல்லது விடைத்தாளையோ தேர்வுக் கூடத்தை விட்டு வெளியில் எடுத்துச் செல்லக்கூடாது. தேர்வு முடிந்தபின் நீங்கள் உங்களுடைய விடைத்தாளைக் கண்காணிப்பாளரிடம் கொடுத்து விட வேண்டும். இவ்வினாத் தொகுப்பினைத் தேர்வு முடிந்தவுடன் நீங்கள் உங்களுடன் எடுத்துச் செல்லலாம்.
10. **குறிப்புகள் எழுதிப் பார்ப்பதற்கு வினாத் தொகுப்பின் கடைசிப் பக்கத்திற்கு முன் உள்ள பக்கத்தை உபயோகித்துக் கொள்ளலாம். இதைத் தவிர, வினாத் தொகுப்பின் எந்த இடத்திலும் எந்த வித குறிப்புகளையும் செய்யக்கூடாது. இந்த அறிவுரை கண்டிப்பாக பின்பற்றப்பட வேண்டும்.**
11. 101 முதல் 200 வரையிலான வினாக்களில் ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகள்தான் முடிவானதாகும்.
12. விண்ணப்பதாரர்கள் விடையளிக்காமல் உள்ள வினாக்களின் மொத்த எண்ணிக்கையை விடைத்தாளின் பக்கம் 2-ல் அதற்கென உரிய கட்டத்தில் எழுதி நிரப்பவும். இதற்கென கூடுதலாக ஐந்து நிமிடங்கள் வழங்கப்படும்.
13. மேற்கண்ட அறிவுரைகளில் எதையாவது மீறினால் தேர்வாணையம் முடிவெடுக்கும் நடவடிக்கைகளுக்கு உள்ளாக நேரிடும் என அறிவுறுத்தப்படுகிறது.

SEE BACKSIDE OF THIS BOOKLET FOR ENGLISH VERSION OF INSTRUCTIONS

SEAL

www.prepp.in

SPACE FOR ROUGH WORK

www.prepp.in

Prepp
Your Personal Exams Guide

1. உலகம், உயிர், கடவுள் ஆகிய மூன்றும் காட்டும் காவியம் என திரு.வி.க. எந்த காவியத்தைக் கூறினார்?

(A) பெரிய புராணம்

(B) கந்த புராணம்

(C) சீறாப் புராணம்

(D) திருவிளையாடற் புராணம்

2. வீடுதோறிரந்தும் – பிரித்தெழுதியவற்றுள் சரியானதைத் தெரிந்தெழுதுக.

(A) வீடுதோறும் + இரந்தும்

(B) வீடுதோ + றும் + இரந்தும்

(C) வீடுதோர் + இரந்தும்

(D) வீடுதோறு + இரந்தும்

3. பொருத்தமில்லாத இணை

(A) இன்மை - இன்பம்

(B) திண்மை - வலிமை

(C) ஆழி - கடல்

(D) நோன்மை - தவம்

Prepp
Your Personal Exam Guide

www.prepp.in

4. சந்திப் பிழையற்ற தொடர் எது?

(A) கடுகை துளைத்து ஏழ்கடலைப் புகட்டி குறுகத்தறித்தக் குறள்

(B) கடுகைத் துளைத்து ஏழ்க்கடலைப் புகட்டி குறுகத்தறித்தக் குறள்

(C) கடுகைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டிக் குறுகத்தறிக்கக் குறள்

(D) கடுகைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டிக் குறுகத்தறித்த குறள்

5. பிறமொழிச் சொற்களை நீக்குதல்

நமஸ்காரம் என்று சாஷ்டாங்கமாக விழுந்தவனை ஆசீர்வதித்தேன்

(A) வணக்கம் என்று பணிந்தவனை வாழ்த்தினேன்

(B) வணக்கம் என்று நெடுஞ்சாண் கிடையாக விழுந்தவனை ஆசீர்வதித்தேன்

(C) வணக்கம் என்று நெடுஞ்சாண் கிடையாக விழுந்தவனை வாழ்த்தினேன்

(D) வணக்கம் என்று விழுந்தவனை ஆசீர்வதித்தேன்

6. பிறமொழிச் சொற்களற்ற தொடர்

(A) அவர்கள் இருவருக்கும் இடையே விவாதம் நடந்தது

(B) அவர்கள் இருவருக்கும் இடையே உரையாடல் நடந்தது

(C) அவர்கள் இருவருக்கும் இடையே சம்பாஷணை நடந்தது

(D) அவர்கள் இருவருக்கும் இடையே கான்வர்சேசன் நடந்தது

www.prepp.in

7. 'வருவான்' என்பதில் வேர்ச்சொல் யாது?

(A) வரு (B) வருவார்

(C) வா (D) வ

8. 'கொள்' என்று வேர்ச்சொல்லிலிருந்து உருவாகிய வினையெச்சம் எது?

(A) கொண்டு

(B) கொண்ட

(C) கொள்ளற்க

(D) கொண்டார்

9. 'கொல்' என்ற வேர்ச்சொல்லிற்கான தொழிற்பெயர் எது?

(A) கொல்க

(B) கொல்லற்க

(C) கோறல்

(D) கொன்ற

10. 'எள்' என்ற வேர்ச்சொல்லிலிருந்து உருவான தொழிற்பெயர் எது?

(A) எள்ளிய

(B) எள்ளினான்

(C) எள்ளல்

(D) இவற்றில் ஏதுமில்லை

www.prepp.in

11. சிலப்பதிகாரம் தமிழில் முதன் முதலில் தோன்றிய காப்பியமாகும். இதனைக் குடிமக்கள் காப்பியம் என அறிஞர் போற்றுவர்

(A) அறிஞர் எதனைப் போற்றுவர்?

(B) தமிழில் முதன்முதலில் காப்பியம் தோன்றியது?

(C) குடி மக்கள் காப்பியம் என்றால் என்ன?

(D) தமிழில் குடிமக்கள் காப்பியம் என அறிஞர் போற்றியது எந்த் நூல்?

12. ஒருவர் பேசுவதை, அவர் பேசியபடியே கூறுவது எவ்வகைத் தொடர்?

(A) செய்வினைத் தொடர் (B) பிறவினைத் தொடர்

(C) நேர்கூற்றுத் தொடர் (D) அயற்கூற்றுத் தொடர்

13. பின்வருவனவற்றுள் எவ்வாக்கியம் செயப்பாட்டுவினை வாக்கியம் எனச் சுட்டிக் காட்டுக.

(A) பாவாணர் அரசின் உதவியுடன் சொற்பிறப்பியல் அகர முதலி வெளியிட்டார்

(B) அரசின் உதவியுடன் பாவாணரால் சொற்பிறப்பியல் அகர முதலி வெளியிடப்பட்டது

(C) அரசு உதவி செய்ததால் பாவாணர் சொற்பிறப்பியல் அகர முதலி வெளியிட்டார்

(D) சொற்பிறப்பியல் அகர முதலியை பாவாணர் அரசு உதவியுடன் வெளியிட்டார்

14. தேவர் அனையர் கயவர் அவருந்தாம்
மேவன செய்தொ லான்.

– இக்குறட்பாவில் இடம் பெற்ற அணியைச் சுட்டுக.

(A) வஞ்சப்புகழ்ச்சி அணி (B) தற்குறிப்பேற்ற அணி

(C) இரட்டுற மொழிதல் அணி (D) பின்வருநிலையணி

www.prepp.in

Prepp
Your Personal Exams Guide

15. திருக்குறள் அறத்துப்பாலில் உள்ள அதிகாரங்களின் மொத்த எண்ணிக்கை

(A) 38

(B) 70

(C) 9

(D) 10

16. தமிழக அரசு எந்நாளைத் திருவள்ளுவர் நாளாக அறிவித்துள்ளது?

(A) சித்திரை 1

(B) ஆடி 18

(C) தை 2

(D) புரட்டாசி 3

17. பொருத்துக :

(a) இன்மை 1. வலிமை

(b) திண்மை 2. வறுமை

(c) ஆழி 3. தவம்

(d) நோன்மை 4. கடல்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 2 | 1 | 3 |
| (B) | 2 | 1 | 4 | 3 |
| (C) | 1 | 3 | 2 | 4 |
| (D) | 3 | 4 | 1 | 2 |

www.prepp.in

18. 'தெரிதரக் கொணர்ந்த என்றால் அமிழ்தினும் சீர்த்தவன்றே'– என்ற வரிகள் இடம்பெற்ற நூல்

(A) சிலப்பதிகாரம்

(B) சீவகசிந்தமாணி

(C) கம்பராமாயணம்

(D) மணிமேகலை

19. கம்பராமாயணத்தில் எத்தனை பாடல்களுக்கொரு முறை சடையப்ப வள்ளல் வாழ்த்திப் பாடப்பட்டுள்ளார்?

(A) ஆயிரம்
(B) நூறு
(C) இருநூறு
(D) ஐம்பது

20. பின்வருவனவற்றுள் சரியானது

I. பதிற்றுப்பத்து என்னும் நூலில் 10 சேர மன்னர்களைப் பற்றி 10 புலவர்கள் பாடியுள்ளனர்

II. முதல் பத்தும் எட்டாம் பத்தும்கிட்டவில்லை

III. முதல் பத்தும் 10 ஆம் பத்தும் கிட்டவில்லை

(A) I கூற்றும் II கூற்றும் சரியே

(B) I கூற்றும் III கூற்றும் தவறு

(C) I கூற்றும் II கூற்றும் தவறு

(D) I கூற்றும் III கூற்றும் சரியே

21. பத்துப்பாட்டு நூல்களுள் அகப்பொருள் சார்ந்த நூல்கள்

(A) முல்லைப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை

(B) முல்லைப்பாட்டு, மலைபடுகடாம், நெடுநல்வாடை

(C) மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, பட்டினப்பாலை

(D) மலைபடுகடாம், குறிஞ்சிப்பாட்டு, நெடுநல்வாடை

www.prepp.in

22. 'பெருமாள் திருமொழி' நூலின் ஆசிரியர்,

(A) குலசேகர ஆழ்வார்

(B) பெரியாழ்வார்

(C) திருப்பாணாழ்வார்

(D) திருமங்கையாழ்வார்

23. "தான் நோக்கா தெத்துயரம் செய்திடினும் தார்வேந்தன்
கோனோக்கி வாழும் குடிபோன்றிருந்தேனே" — இப்பாடல் இடம் பெற்ற நூல்

(A) தேவாரம்

(B) திருவாசகம்

(C) நாலாயிரத் திவ்விய பிரபந்தம்

(D) பெரியபுராணம்

24. "பொங்கு கடல் கல்மிதப்பிற் போந்தேறும் அவர் பெருமை அங்கணர்தம் புவனத்தில் அறியாதார் யாருளரே"— இவ்வடிகள் இடம் பெறும் நூல் எது?

(A) கம்பராமாயணம்

(B) மகாபாரதம்

(C) பெரியபுராணம்

(D) நளவெண்பா

25. பின்வருவனவற்றுள் சிற்றிலக்கிய வகை நூல்

(A) நாலடியார்

(B) கலிங்கத்துப்பரணி

(C) பழமொழி நானூறு

(D) இன்னாநாற்பது

www.prepp.in

Prepp
Your Personal Exams Guide

26. "மாங்காய்ப்பால் உண்டு மலைமேலே இருப்போர்க்குத்
தேங்காய்ப்பால் எதுக்கடி? – குதம்பாய்
தேங்காய்ப்பால் எதுக்கடி"– இப்பாடலை எழுதிய சித்தர்

(A) அகப்பேய்ச் சித்தர்

(B) பாம்பாட்டிச் சித்தர்

(C) குதம்பைச் சித்தர்

(D) இடைக்காட்டுச் சித்தர்

27. இவருக்கு ஒப்பார் ஒருவருமிலர் என்று பாடுவது யாரைப்பற்றிய பாடல்?

(A) வாழ்பவரை

(B) இறந்தவரை

(C) சிறந்தவரை

(D) வள்ளலை

28. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | திருத்தொண்டத்தொகை | 1. | நம்மாழ்வார் |
| (b) | திருசிற்றம்பலக் கோவையார் | 2. | திருமங்கை ஆழ்வார் |
| (c) | திருவாய்மொழி | 3. | சுந்திர மூர்த்தி |
| (d) | திருக்குறுந் தாண்டகம் | 4. | மணிவாசகர் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 2 | 1 |
| (B) | 3 | 4 | 1 | 2 |
| (C) | 4 | 3 | 1 | 2 |
| (D) | 3 | 2 | 1 | 4 |

www.prepp.in

Prepp
Your Personal Exams Guide

29. பணை என்னும் சொல்லின் பொருள்

(A) புனல்
(B) மேகம்
(C) மூங்கில்
(D) குடை

30. செந்தமிழை செழுந்தமிழாக காண ஆர்வம் கொண்ட கவிஞர்

(A) சுரதா
(B) பாரதிதாசனார்
(C) பாரதியார்
(D) கலைஞர் மு. கருணாநிதி

31. 'கல்லக்குடி மாகாவியம்' – நூலின் ஆசிரியர்

(A) கம்பர்
(B) கவிஞர் சுரதா
(C) அப்துல் ரகுமான்
(D) கண்ணதாசன்

32. 'பக்தி முக்கியம் அந்தக்காலம்
படிப்பு முக்கியம் இந்தக்காலம்' – இப்பாடலடியைப் பாடியவர் யார்?

(A) பாரதியார்
(B) பாரதிதாசன்
(C) வைரமுத்து
(D) உடுமலை நாராயணகவி

33. பிரெஞ்சு குடியரசுத் தலைவரிடம் "செவாலியர்" விருது பெற்றவர்

(A) வீரமாமுனிவர்
(B) பாரதியார்
(C) கம்பதாசன்
(D) வாணிதாசன்

34. "கால்கள் இரண்டும் படைத்தவன் நீ – பெருங்
கல்லும் மலையும் கடப்பதற்கே" – என்ற எழுச்சிமிகு வரிகளுக்கு சொந்தமானவர்

(A) தாராபாரதி
(B) பாரதியார்
(C) பாரதிதாசன்
(D) சாலை. இளந்திரையன்

www.prepp.in

35. பம்மல் சம்பந்தனார் —————— எனப் போற்றப்பட்டார்.

(A) தமிழ் நாடகத் தலைமையாசிரியர் (B) தமிழ் நாடகத் தந்தை

(C) நாடக உலகின் இமயமலை (D) சிறந்த வசன கர்த்தா

36. பட்டியல் I-ஐப் பட்டியல் II உடன் பொருத்துக.

| பட்டியல் I சிறுகதை | | பட்டியல் II ஆசிரியர் |
|---|---|---|
| (a) தேங்காய்த்துண்டுகள் | 1. | ஜெயகாந்தன் |
| (b) கிழிசல் | 2. | புதுமைப்பித்தன் |
| (c) சட்டை | 3. | டாக்டர் மு.வ. |
| (d) ஒருநாள் கழிந்தது | 4. | நாஞ்சில் நாடன் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 3 | 4 | 2 |
| (B) | 2 | 4 | 3 | 1 |
| (C) | 4 | 1 | 2 | 3 |
| (D) | 3 | 4 | 1 | 2 |

37. கருத்துப்படம் அமைக்கத் தொடங்கியவர் யார்?

(A) எடிசன் (B) வால்ட் டிஸ்னி

(C) வால்ட் வின்மன் (D) எட்வர்டு மைபிரிட்சு

38. 'திரை உலக அகத்தியர்' என்னும் சிறப்புப் பெயர் பெற்றவர் யார்?

(A) அறிஞர் அண்ணா (B) கவிஞர் கண்ணதாசன்

(C) டாக்டர் மு.வ. (D) கவிஞர் சுரதா

39. "பஃறுளி ஆற்றுடன் பன்மலை அடுக்கத்துக் குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ள" – எனக் கூறும் நூல்.

(A) புறநானூறு (B) சிலப்பதிகாரம்

(C) தேவாரம் (D) பட்டினப்பாலை

www.prepp.in

Prepp
Your Personal Exams Guide

40. 'செந்தமிழ் ஞாயிறு' என்ற சிறப்புப் பெயர் பெற்றவர்

(A) தேவநேயப்பாவாணர் (B) பரிதிமாற்கலைஞர்

(C) பெருஞ்சித்திரனார் (D) சி. இலக்குவனார்

41. 'திருவாசகத்தினை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர்'

(A) வீரமாமுனிவர் (B) ஜி.யு. போப்

(C) ரா.பி. சேதுப்பிள்ளை (D) கால்டுவெல்

42. "பரமார்த்த குரு கதை" என்னும் நகைச்சுவை நூலை எழுதியவர்

(A) ஜி.யு. போப் (B) ரா.பி. சேதுப்பிள்ளை

(C) வீரமாமுனிவர் (D) ஆறுமுகநாவலர்

43. "அரைவயிற்றுக் கஞ்சிக்கு அல்லற்படும் ஊமைகளின் உறுப்பினனாக நான் பேசுகிறேன்" என்று கூறியவர்

(A) காந்தியடிகள் (B) ஜவகர்லால் நேரு

(C) அம்பேத்கர் (D) அறிஞர் அண்ணா

44. தலைவர்களை உருவாக்குபவர் என்று சிறப்பித்து அழைக்கப்படுபவர் யார்?

(A) இராஜாஜி (B) ஜவகர்லால் நேரு

(C) காமராசர் (D) அம்பேத்கர்

45. "உழைப்பும் கல்வியும் அற்ற செல்வம் மிருகத்தனம்" என்றவர்

(A) காந்தியடிகள் (B) பெரியார்

(C) திரு.வி. கலியாண சுந்தரனார் (D) அம்பேத்கர்

www.prepp.in

Prepp
Your Personal Exams Guide

46. காந்தியடிகளால் 'தத்தெடுக்கப்பட்ட மகள்' என்று செல்லமாக அழைக்கப்பட்டவர்

(A) அஞ்சலையம்மாள்

(B) கோதைநாயகியம்மாள்

(C) அம்புஜத்தம்மாள்

(D) அசலாம்பிகையம்மாள்

47. பொருந்தும் விடையை எழுதுக :

காவிரிப்பூம்பட்டினத்தில் ஏற்றுமதி இறக்குமதியின்பொருட்டுப் பொருள்கள் மண்டிக் கிடந்ததைக் கூறும் நூல்

(A) முல்லைப்பாட்டு
(B) குறிஞ்சிப்பாட்டு
(C) நெடுநல்வாடை
(D) பட்டினப்பாலை

48. பசு கொடுக்கும் ஐந்து பொருளின் பெயர்

(A) பஞ்ச சீலம்
(B) பஞ்ச காவினி
(C) பஞ்ச கவ்வியம்
(D) பஞ்சமுக கவ்வியம்

49. வள்ளலாரைப் பாரதியார் எவ்வாறு போற்றினார்?

(A) புதுநெறி கண்ட புலவர்
(B) அருட்பிரகாச வள்ளலார்
(C) புரட்சித்துறவி
(D) இறையருள் பெற்ற திருமகனார்

50. "அகத்தே கறுத்துப் புறத்து வெளுத்து
இருந்த உலகர் அனைவரையும் சகத்தே திருத்த"

– இறைவன் தம்மை வருவித்ததாக கூறியவர்.

(A) திருமூலர்
(B) திருநாவுக்கரசர்
(C) இராமலிங்க அடிகள்
(D) குலசேகர ஆழ்வார்

www.prepp.in

Prepp
Your Personal Exams Guide

51. சரியான பொருத்தம் எது?

| | சொல் | | பொருள் |
|---|---|---|---|
| (a) | விரை | 1. | உடல் |
| (b) | கழல் | 2. | பெருகி |
| (c) | ததும்பி | 3. | மணம் |
| (d) | மெய் | 4. | அணிகலன் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 2 | 1 |
| (B) | 2 | 3 | 4 | 1 |
| (C) | 1 | 2 | 3 | 4 |
| (D) | 3 | 2 | 4 | 1 |

52. பட்டியல் I-லிருந்து பட்டியல் II-ஐப் பொருத்துக

| | பட்டியல் I<br>திணை | | பட்டியல் II<br>கருப்பொருள் |
|---|---|---|---|
| (a) | குறிஞ்சி | 1. | சூறையாடல் |
| (b) | முல்லை | 2. | களையெடுத்தல் |
| (c) | மருதம் | 3. | காளை தழுவல் |
| (d) | பாலை | 4. | வெறியாடல் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 1 | 2 | 4 |
| (B) | 4 | 2 | 3 | 1 |
| (C) | 4 | 3 | 2 | 1 |
| (D) | 2 | 4 | 3 | 1 |

53. தண்டமிழ் ஆசான் என இளங்கோவடிகளால் போற்றப்பட்டவர் யார்?

(A) கம்பர்
(B) சீத்தலைச் சாத்தனார்
(C) திருவள்ளுவர்
(D) ஔவையார்

www.prepp.in

Prepp
Your Personal Exams Guide

54. முல்லைத் திணைக்குப் பொருந்தாதது?

(A) தோன்றல்
(B) ஆயர்
(C) சேர்ப்பன்
(D) இடையர்

55. என் மாமா வந்தது – இத்தொடரில் அமைந்துள்ள வழு என்ன?

(A) திணை வழு
(B) பால் வழு
(C) இட வழு
(D) கால வழு

56. சந்திப் பிழையற்ற சொற்றொடர் எது?

(A) போர் கோலம் பூண்டு வந்த பரதனது சேனையை கண்ட குகன், இராமனை வெல்ல கருதி வந்தான் என்று எண்ணினான்

(B) போர்க் கோலம் பூண்டு வந்தப் பரதனதுச் சேனையைக் கண்ட குகன், இராமனை வெல்லக் கருதி வந்தான் என்று எண்ணினான்

(C) போர்க் கோலம் பூண்டு வந்த பரதனது சேனையைக் கண்ட குகன், இராமனை வெல்லக் கருதி வந்தான் என்று எண்ணினான்

(D) போர்க் கோலம் பூண்டு வந்த பரதனது சேனையை கண்ட குகன், இராமனை வெல்லக் கருதி வந்தான் என்று எண்ணினான்

57. ஒருமை பன்மைப் பிழையற்ற தொடர் எது?

(A) இங்குள்ளது எல்லாம் நல்ல பழமே
(B) இங்குள்ளது எல்லாம் நல்ல பழங்களே
(C) இங்குள்ளன எல்லாம் நல்ல பழமே
(D) இங்குள்ளன எல்லாம் நல்ல பழங்களே

Prepp
Your Personal Exams Guide

58. ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச்சொல்லை பொருத்துக

| | | | |
|---|---|---|---|
| (a) | Aesthetic | 1. | பாசறை |
| (b) | Archaeology | 2. | இயற்கை வனப்பு |
| (c) | Green Rooms | 3. | தொல்லியல் ஆய்வு |
| (d) | Explorers | 4. | நிலவியல் கண்டுபிடிப்பாளர்கள் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 2 | 1 | 3 |
| (B) | 1 | 3 | 2 | 4 |
| (C) | 2 | 3 | 1 | 4 |
| (D) | 3 | 4 | 1 | 2 |

59. வண்மை என்பதன் பொருள் கூறுக

(A) வண்ணம்

(B) வலிமை

(C) வள்ளல் தன்மை

(D) மெலிவு

60. ஓரெழுத்து ஒருமொழி உரிய பொருளைக் கண்டறிக

'மா'

(A) குட்டி

(B) கொக்கு

(C) விலங்கு

(D) நீர்

www.prepp.in

Prepp
Your Personal Exams Guide

61. அகர வரிசைப்படி வந்துள்ள சொற்களைச் சுட்டிக் குறிக்க.

(A) முகில், புனல், நவ்வி, சிந்தை

(B) புனல், முகில், நவ்வி, சிந்தை

(C) சிந்தை, நவ்வி, முகில், புனல்

(D) சிந்தை, நவ்வி, புனல், முகில்

62. சரியான தொடரைத் தேர்ந்தெடு.

(A) குமரி கண்ட நோய்க்குக் குமரி கொடு

(B) குமரி நோய்க்குக் கண்ட குமரி கொடு

(C) நோய்க்குக் குமரி கண்ட குமரி கொடு

(D) குமரி கொடு நோய்க்குக் கண்ட குமரி

63. நீர், நீவிர் என்பன —————— பெயர்கள்.

(A) முன்னிலை ஒருமை பெயர்கள்

(B) முன்னிலைப் பன்மை பெயர்கள்

(C) ஏவல் ஒருமை பெயர்கள்

(D) படர்க்கை பலர்பால் பெயர்கள்

64. 'நாவினுக் கரசர் கேளா'

இச்சொற்றொடரில் கோடிட்ட சொல்லுக்குரிய இலக்கணக் குறிப்பு

(A) விளித்தொடர்

(B) ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

(C) செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம்

(D) எதிர்மறைப் பெயரெச்சம்

www.prepp.in

Prepp
Your Personal Exams Guide

65. 'மண் திணிந்த நிலனும்

நிலன் ஏந்திய விசும்பும்' என்ற பாடல் வரியில் இடம்பெறும் தொடை எது?

(A) எதுகை

(B) இயைபு

(C) மோனை

(D) அளபெடை

66. காலம் கருதி இருப்பர் கலங்காது

ஞாலம் கருது பவர் – இக்குறட்பாவில் பயின்று வருவது

(A) அடி எதுகை, சீர் மோனை

(B) அடிமோனை, அடி இயைபு

(C) சீர்மோனை, அடி இயைபு

(D) அடிமோனை, சீர்எதுகை

67. ".....புரை தீர்ந்த வாழ்வினிலே அழைத்துச்

செல்லாத தில்லை பொதுமறை யான திருக்குறளில்"

– எனத் திருக்குறளைப் போற்றியவர்

(A) பாரதியார்

(B) கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

(C) பாரதிதாசன்

(D) நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கப் பிள்ளை

www.prepp.in

Prepp
Your Personal Exams Guide

68. "தானதைச் சம்பு வின்கனி யென்று
தடங்கையில் எடுத்துமுன் பார்த்தாள்"
இவ்வரிகளில் 'சம்புவின்கனி' எனக் குறிப்பிடப்படுவது எது?

(A) நெல்லிக்கனி
(B) நாவற்கனி
(C) மாங்கனி
(D) கொய்யாக்கனி

69. பட்டியல் I ஐ பட்டியல் II உடன் பொருத்துக.

| | பட்டியல் I | | பட்டியல் II |
|---|---|---|---|
| (a) | நிலத்துக்கு அழகு | 1. | அறம் |
| (b) | குளத்துக்கு அழகு | 2. | நெல்லும் கரும்பும் |
| (c) | பெண்ணுக்கு அழகு | 3. | தாமரை |
| (d) | மறுமை உலகுக்குச் செல்ல அழகு | 4. | நாணம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 2 | 4 | 1 |
| (B) | 2 | 3 | 4 | 1 |
| (C) | 1 | 2 | 3 | 4 |
| (D) | 2 | 3 | 1 | 4 |

70. 'அறவுரைக் கோவை' என வழங்கப்படும் நூலின் பெயரை எழுதுக

(A) திருக்குறள்
(B) முதுமொழிக்காஞ்சி
(C) ஆசாரக்கோவை
(D) திருச்சிற்றம்பலக்கோவை

71. நாலடியாருக்கு வழங்கும் சிறப்பு பெயர் யாது?

(A) நாவடி நானூறு
(B) நானூறு அடிகள்
(C) நாலடி நான்கு
(D) நாலடி நானூறு

www.prepp.in

Prepp
Your Personal Exams Guide

72. கீழ்வரும் அடிவரையறைகளைச் சரியான நூலுடன் பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | 13 அடி முதல் 31 அடி வரை | 1. | நற்றிணை |
| (b) | 3 அடி முதல் 6 அடி வரை | 2. | குறுந்தொகை |
| (c) | 9 அடி முதல் 12 அடி வரை | 3. | ஐங்குறுநூறு |
| (d) | 4 அடி முதல் 8 அடி வரை | 4. | அகநானூறு |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 1 | 2 |
| (B) | 2 | 1 | 4 | 3 |
| (C) | 4 | 1 | 3 | 2 |
| (D) | 3 | 2 | 1 | 4 |

73. பின்வரும் நூல்களுள் பொருளால் மாறுபட்ட நூல்?

(A) நற்றிணை
(B) குறுந்தொகை
(C) ஐங்குறுநூறு
(D) புறநானூறு

74. 'காதற் கணவனைக் கண்டால், அவன் வாயில்
தீதறு நல்உரை கேட்பனே!' ஈதொன்று – இவ்வடிகள் இடம் பெறும் நூல்

(A) சிலப்பதிகாரம்
(B) மணிமேகலை
(C) குண்டலகேசி
(D) சீவகசிந்தாமணி

75. ஆடல்மகள் மாதவி பெற்ற பட்டம்

(A) ஆடலரசி
(B) நாட்டியப்பேரொளி
(C) ஆடல் வல்லாள்
(D) தலைக் கோலரிவை

www.prepp.in

76. ஆனை ஆயிரம் அமரிடை வென்ற மானவனுக்கு வகுப்பது பரணி எனும் பாடல் வரிகள் இடம் பெற்ற இலக்கண நூல்

(A) தொல்காப்பியம்
(B) நன்னூல்
(C) பன்னிருபாட்டியல்
(D) தண்டியலங்காரம்

77. சைவ வைணவத்தை இணைப்பதற்காக எழுதப்பட்ட நூல்

(A) குறவஞ்சி
(B) முக்கூடற்பள்ளு
(C) அந்தாதி
(D) சதகம்

78. அம்மானை என்பது யாது?

(A) ஆண்கள் விளையாடும் விளையாட்டு
(B) பெண்கள் விளையாடும் விளையாட்டு
(C) குழந்தைகள் விளையாடும் விளையாட்டு
(D) ஆணும் பெண்ணும் சேர்ந்து விளையாடும் விளையாட்டு

79. 'பாடு' என்றவுடன் உடனே பாடுபவருக்கு வழங்கப்படும் பெயர்

(A) மதுரகவி
(B) ஆசுகவி
(C) வித்தாரகவி
(D) சித்திரகவி

80. 'கொம்பினை யொத்த மடப்பிடி யோடும்' – எனும் தொடரில் மடப்பிடி எனக் குறிப்பிடப்படுபவள்

(A) தேவ மகளிர்
(B) கண்ணகி
(C) பாஞ்சாலி
(D) சீதை

www.prepp.in

Prepp
Your Personal Exams Guide

81. மாணிக்கவாசகரை ஆட்கொள்ளப் பெற்ற இறைவன் கோயில் கொண்டுள்ள திருப்பெருந்துறை – என்ற ஊர் எந்த மாவட்டத்தில் உள்ளது?

(A) விருதுநகர் மாவட்டம்

(B) தஞ்சை மாவட்டம்

(C) புதுக்கோட்டை மாவட்டம்

(D) திருச்சி மாவட்டம்

82. 'தாண்டக வேந்தர்' என்றழைக்கப்படுபவர்

(A) திருஞான சம்பந்தர்

(B) திருநாவுக்கரசர்

(C) திருமங்கையாழ்வார்

(D) திருமழிசையாழ்வார்

83. 'நமக்குத் தொழில் கவிதை நாட்டிற்குழைத்தல் இமைப் பொழுதும் சோராதிருத்தல்' – என்று கூறியவர்

(A) கவிமணி

(B) பாரதியார்

(C) சுரதா

(D) முடியரசன்

84. பொருத்துக :

(a) கம்பர் — 1. பாஞ்சாலி சபதம்

(b) ஒட்டக்கூத்தர் — 2. குடும்ப விளக்கு

(c) பாரதிதாசன் — 3. இராசராச சோழனுலா

(d) பாரதியார் — 4. சரசுவதி அந்தாதி

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 2 | 1 |
| (B) | 4 | 3 | 2 | 1 |
| (C) | 4 | 2 | 1 | 3 |
| (D) | 1 | 3 | 2 | 4 |

www.prepp.in

Prepp
Your Personal Exams Guide

85. பின்வருவனவற்றுள் அப்துல் ரகுமானின் கவிதைத் தொகுப்பில் இல்லாத நூல்

(A) ஒளிப்பறவை (B) நேயர் விருப்பம்
(C) பால்வீதி (D) ஆலாபனை

86. 1991 ஆம் ஆண்டு தமிழக அரசின் பாவேந்தர் விருது பெற்றவர் யார்?

(A) சாலை. இளந்திரையன் (B) ஆலந்தூர் கோ. மோகனரங்கன்
(C) வாணிதாசன் (D) தாராபாரதி

87. சாலை. இளந்திரையனின் கவிதைத் தொகுப்பைக் கண்டறி

(A) தமிழர் சமுதாயம் (B) தமிழோவியம்
(C) புதுமைப் பூக்கள் (D) பூத்தது மானுடம்

88. 'ஆனந்தரங்கன் பிள்ளைத்தமிழ்' என்ற நூலை எழுதியவர் யார்?

(A) தியாகராச தேசிகர் (B) அரிமதி தென்னகன்
(C) அருணாசலக் கவிராயர் (D) இந்திரா பார்த்தசாரதி

89. 'தொண்டுக்கு முந்து, தலைமைக்குப் பிந்து' என்பது உன் நெறியாக இருக்கட்டும் என்று கூறியவர்

(A) திரு. வி. கல்யாணசுந்தரனார் (B) காந்தியடிகள்
(C) மு. வரதராசனார் (D) ஜவஹர்லால் நேரு

90. 'டம்பாச்சாரி விலாசம்' என்னும் நாடக நூலை எழுதியவர்

(A) தி.க. சண்முகனார் (B) சங்கரதாஸ் சுவாமிகள்
(C) காசி விசுவநாதர் (D) பரிதிமாற் கலைஞர்

www.prepp.in

Prepp
Your Personal Exams Guide

91. "தொண்டை நாடு ———————— உடைத்து".

(A) வேழமுடைத்து
(B) சான்றோர் உடைத்து
(C) முத்துடைத்து
(D) சோறுடைத்து

92. தமிழ் பிறமொழித் துணையின்றித் தனித்து இயங்குவது மட்டுமின்றித் தழைத் தோங்கவும் செய்யும் என்று கூறியவர் யார்?

(A) ஈராஸ் பாதிரியார்
(B) ஜி.யு. போப்
(C) தமிழ்த் தென்றல் திரு.வி.க.
(D) கால்டுவெல்

93. "தமிழை வளர்க்க வேண்டும் என்றால் பிறமொழியை வெறுக்க வேண்டும் என்பது பொருளன்று" – எனக் கூறியவர்.

(A) உ.வே. சாமிநாத ஐயர்
(B) திரு.வி. கலியாண சுந்தரனார்
(C) பாரதியார்
(D) பாரதிதாசன்

94. பொருத்துக :

| | புலவர் | | நூற்பெயர் |
|---|---|---|---|
| (a) | திரு.வி.க. | 1. | என் சரித்திரம் |
| (b) | உ.வே.சா. | 2. | மண்ணிலே விண் |
| (c) | பரிதிமாற் கலைஞர் | 3. | உரிமை வேட்டல் |
| (d) | தேவநேயப்பாவாணர் | 4. | ரூபாவதி |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 1 | 4 | 2 |
| (B) | 2 | 4 | 1 | 3 |
| (C) | 3 | 1 | 2 | 4 |
| (D) | 3 | 4 | 2 | 1 |

95. தமிழ் அறிஞர் டாக்டர். உ.வே.சா அவர்களின் பெயரின் விரிவாக்கம் என்ன?

(A) உத்தமபுரம் வேங்கடனின் மகனார் சாமிநாதன்
(B) உத்தமதானபுரம் வேங்கடசுப்புவின் மகனார் சாமிநாதன்
(C) உத்தமபுரம் வேங்கடநாதனின் மகனார் சாமிநாதன்
(D) உத்தமதானபுரம் வேங்கடநாதனின் மகனார் சாமிநாதன்

www.prepp.in

Prepp
Your Personal Exams Guide

96. 1990-ஆம் ஆண்டு (இந்திய மாமணி) 'பாரத ரத்னா' விருது பெற்றவர் யார்?

(A) அம்பேத்கர்

(B) மொரார்ஜி தேசாய்

(C) நேரு

(D) இராஜாஜி

97. குறிஞ்சி நில ஊர்

(A) ஆர்க்காடு

(B) நீலகிரி

(C) நீலாங்கரை

(D) ஆத்தூர்

98. எது சரியானது?

'தமிழை ஆட்சி மொழியாகக் கொண்ட நாடுகளின் பட்டியல்'

(A) மொரிசியசு, இலங்கை, கனடா

(B) பிரிட்டன், பிஜித் தீவுகள், சிங்கப்பூர்

(C) இலங்கை, சிங்கப்பூர், மலேசியா

(D) பாகிஸ்தான், மலேசியா, தென்அமெரிக்கா

99. உலக வனவிலங்கு நாள் எது?

(A) அக்டோபர் 4

(B) அக்டோபர் 6

(C) அக்டோபர் 3

(D) அக்டோபர் 1

100.. 'தென்னாட்டின் ஜான்சிராணி' என அழைக்கப்பட்டவர்

(A) அஞ்சலையம்மாள்

(B) அம்புஜத்தம்மாள்

(C) இராணி மங்கம்மாள்

(D) வேலுநாச்சியார்